NHS
Blood and Transplant

# உறுப்பு தானமும் மத நம்பிக்கைகளும்

## உறுப்பு தானம் மற்றும் இந்து நம்பிக்கைகளுக்கான ஒரு வழிகாட்டி

# உறுப்பு தானம்

## உறுப்பு தானம்

உறுப்பு தானம் என்பது உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படும் ஒருவருக்கு ஓர் உறுப்பை அன்பளிப்பாகத் தருதல். உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளால் ஒவ்வொரு ஆண்டும் பிரிட்டனில் ஆயிரக்கணக்கானோரின் உயிர் காப்பாற்றப்படுகிறது அல்லது வாழ்க்கை மேம்படுகிறது. ஆனால் ஒவ்வொரு நாளும் பிரிட்டனில் யாராவது ஒருவர் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காகக் காத்திருந்து மரணமடைகிறார்கள்.

மரணமடைந்தவர்களால் தானம் அளிக்கப்படக்கூடிய உறுப்புகளில் இதயம், நுரையீரல்கள், சிறுநீரகங்கள், கல்லீரல், கணையம், சிறுகுடல் ஆகியவையும் அடங்கும். சருமம், எலும்பு, இதய வால்வுகள், கருவிழிப்படலங்கள் போன்ற திசுவையும் மற்றவர்களுக்கு உதவப் பயன்படுத்த முடியும். வாழும்போதே ஒற்றைச் சிறுநீரகத்தை அல்லது கல்லீரலில் ஒரு பகுதியை தானமளிப்பதும் சாத்தியம்தான்.

## உறுப்புகளை தானமளிப்பது பற்றிச் சிந்திப்பது ஏன் முக்கியமானது?

மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களால், சிறுநீரக, கல்லீரல் மற்றும் இதயச் செயலிழப்பு போன்ற பலவகையான மரணம் நோக்கிய நிலைகளைக் கொண்டவர்களின் உயிர்ப்பிழைப்பு வாய்ப்பை அதிகரிக்க, மாற்று அறுவைச் சிகிச்சை மூலம் அளிக்கப்படும் உறுப்புகளையும் திசுக்களையும் பயன்படுத்துவது இப்போது சாத்தியமாகும். முன்பைவிட அதிகமானவர்கள் இப்போது இந்த நிலைகளால் அவதிப்படுகிறார்கள். சில இனக் குழுக்கள் மற்றவற்றைவிட அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பது போல் தெரிகிறது.

ஒரு உறுப்பு தேவைப்படும் ஒருவர் இன்று உங்களுக்குத் தெரியாதவராக இருக்கலாம், ஆனால் நாளை அவர் நீங்கள் அறிந்த மற்றும் நேசிக்கும் மனிதராக ஆகக்கூடும். எனவே, நீங்கள் உறுப்புக் கொடையாளராக இருக்க விரும்புகிறீர்களா என்பது பற்றி முடிவுசெய்ய தயவுசெய்து நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், அந்த முடிவை NHS உறுப்புக் கொடையாளர் பதிவேட்டில் (NHS Organ Donor Register) பதிவு செய்யுங்கள், பின்பு உங்கள் குடும்பத்தினரிடம் சொல்லுங்கள்.

## குடும்பத்தினரை ஈடுபடுத்துதல்

விருப்பப் பங்கேற்பு, விருப்ப விலகல் என்று எது செயலில் இருந்தாலும், பிரிட்டனில் எல்லா இடங்களிலும் உறுப்பு தானத்தில் குடும்பங்களுக்கு ஒரு முக்கியமான பங்கு இருக்கிறது.

நீங்கள் உறுப்புக் கொடையாளராக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் மரணமடைந்தால், நீங்கள் உங்கள் முடிவைப் பதிவு செய்திருக்கிறீர்களா என்று ஒரு சிறப்பு உறுப்பு தானத் தாதி NHS உறுப்புக் கொடையாளர் பதிவேட்டில் பார்ப்பார். நீங்கள் கொடையாளராக இருக்க விரும்பினீர்களா என்பது பற்றி உங்கள் நெருங்கிய உறவினர்களுடன் பேசுவார். என்ன நடக்கும் என்பதில் உங்கள் குடும்பத்தினரின் குரல் மிக முக்கியமானது. எனவே, உங்கள் முடிவு எதுவாக இருந்தாலும் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்திருப்பது முக்கியமாகும். அவர்கள் உங்கள் முடிவை கௌரவித்து நிறைவேற்றுவதை இது இன்னும் எளிதாக்கும்.

## உறுப்பு தானம் எப்போது நிகழலாம்?

மருத்துவர்களும் பிற நலம்பேணல் ஊழியர்களும் ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்ற சாத்தியமான எல்லாவற்றையும் செய்வதில் பற்றுறுதி கொண்டவர்கள். உயிரைக் காப்பாற்ற எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த பின்பும், உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக் குழுவைச் சாராத மருத்துவர்களால் மரணம் உறுதிப்படுத்தப்பட்ட பின்பும்தான் உறுப்பு தானத்தைப் பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது.

பிரிட்டனில் பெரும்பாலான தானமளிக்கப்படும் உறுப்புகள், கடுமையான மூளைக் காயத்தால் இறப்பவர்களிடமிருந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சுவாச இயந்திரம் பொருத்தப்பட்டவர்களிடமிருந்தும் வருகின்றன. அந்த மூளைக் காயம், உயிர்வாழ இன்றியமையாத மூளைத் தண்டில் உள்ள முக்கிய மையங்களைச் சேதப்படுத்தியிருக்கும். மருத்துவர்கள் நரம்பியல் தேர்வளவைகளைப் பயன்படுத்தி இவ்வாறு மரணத்தை உறுதிப்படுத்துகிறார்கள். இது ‘மூளைத் தண்டு மரணம்’ என்றும் அறியப்படுகிறது. இது கோமாவில் அல்லது ‘மூளைச் செயலிழப்பு நிலை’யில் இருப்பது போன்றதல்ல. உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக் குழுவினரைச் சாராத இரு மூத்த மருத்துவர்கள் இருவேறு தருணங்களில் கறாரான தேசிய வழிகாட்டலைப் பின்பற்றிப் பரிசோதனைகளைச் செய்வார்கள்.

நரம்பியல் தேர்வளவைகளைப் பயன்படுத்தி மரணம் உறுதிப்படுத்தப்படும்போதும் நோயாளிக்கு ஒரு சுவாச இயந்திரம் (நுரையீரல்களுக்குள் காற்றைப் புகுத்தி உடல் முழுவதும் ரத்த ஓட்டம் இயங்கச் செய்யும் ஒரு இயந்திரம்) பொருத்தப்பட்டு இருப்பார். உறுப்புகளுக்கு ஆக்சிஜன் செறிந்த ரத்தம் கிடைக்காமல் போவதை இது தடுக்கிறது. உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்கு ஆரோக்கியமான விளைவு ஏற்பட இது அவசியமானது.

உயிருடன் வைத்திருக்கும் தீவிர கவனிப்புச் சிகிச்சையானது குடும்பத்தினரின் சம்மதத்துடன் விலக்கப் பெறுபவர்களிடமிருந்தும் உறுப்பு தானம் கிடைக்கலாம். இதயம் நின்று அதன் பின்பு விரைவில் ரத்த ஓட்டமும் நின்றுவிட்டால், மரணம் உறுதிப்படுத்தப்படும், தானம் நிகழலாம். இது ‘ரத்த ஓட்ட மரணத்திற்குப் பிந்தைய தானம்’ என்று அறியப்படுகிறது.

## கவனிப்பு மற்றும் மரியாதை

உறுப்புகளையும் திசுக்களையும் நீக்குவது மிகுந்த அக்கறையோடும் மரியாதையோடும் செய்யப்படுகிறது. உடலைக் குடும்பத்தினர் பின்பு பார்க்கலாம். அவர்கள் விரும்பினால் ஊழியர்கள் ஒரு பாதிரியாரை அல்லது உள்ளூர் மதத் தலைவரைத் தொடர்பு கொள்ள முடியும்.



பரத் கக்கட் தமது இரண்டு சிறுநீரகங்களையும், கருவிழிப்படலங்கள், பிற திசுக்கள் ஆகியவற்றையும் தமது திடீர் மரணத்திற்குப் பின்பு தானமளித்தார்.

அவரது மனைவியும் இரு மகன்களும் உறுப்பு தானத்திற்கு ஒப்புக்கொண்டார்கள். ஏனென்றால் மற்றவர்களுக்கு உதவுவது பரத்தின் இயல்பு என்றும் இந்து என்ற முறையில் அவரது நம்பிக்கைகளுக்கு - குறிப்பாக சேவா என்ற மரபுடன் - அது ஒத்துப்போனது என்றும் அவர்கள் நினைத்தார்கள்.

# இந்து மதமும் உறுப்பு தானமும்

**இந்துப் புனித நூல்களில் உறுப்பு தானம் என்ற கருத்தாக்கத்திற்கு ஆதரவு அளிக்கும் பகுதிகள் பல இருக்கின்றன. 'தான்' என்பது தானத்திற்கான வடமொழி மூலச் சொல்லாகும். இது தன்னலமின்றி அளித்தல் என்று பொருள்படுகிறது. பத்து நியமங்களின் (நற்செயல்கள்) பட்டியலில் தானம் மூன்றாம் இடத்தில் இருக்கிறது.**

*"உயிர் என்னும் அன்பளிப்பைத் தருதல் – அல்லது மற்றவர்கள் உயிர்வாழ உதவுதல் – இந்து மதத்தில் ஒரு விதமான தானமாகப் பார்க்கப்படுகிறது. விதி என்றால் உங்கள் உடல்நலம் குன்றினால் சிகிச்சையை நாடக் கூடாது என்று பொருள் அல்ல. எந்த விதமான உறுப்பு தானத்தையும் பெறுவது தவறல்ல."*

*சாது யோக்விவேக்தாஸ், தலைமைத் துறவி, BAPS ஸ்ரீ ஸ்வாமிநாராயண் கோவில், லண்டன்*

*"தானமளிப்பதற்குச் சாத்தியமான எல்லா விஷயங்களிலும், உங்கள் உடலை தானமளிப்பதே மிகச் சிறந்தது."*

*மனுஸ்மிருதி*

இறந்த பின்பும் உயிர் இருப்பதாகவும் தொடர்ந்து நிகழும் மறுபிறப்பில் அது ஒரு பகுதி என்றும் இந்துக்கள் உறுதியாக நம்புகிறார்கள். எந்த ஆத்மா அடுத்த பிறவிக்குச் செல்லும் என்பதை ஊழ்வினை முடிவு செய்கிறது. மரணமுள்ள உடலையும் மரணமற்ற ஆத்மாவையும் ஆடை மற்றும் உடலுக்கு உள்ள உறவு போல எளிமையாக விவரிக்கிறது பகவத்கீதை:

*"ஒருவர் பழைய ஆடைகளை எறிந்துவிட்டுப் புதிய ஆடைகளை அணிவது போல, நிரந்தரமான ஆத்மாவானது மரணமடையும்போது பழைய உடலை எறிந்துவிட்டுப் புதிய உடலில் மீண்டும் பிறக்கிறது."*

*பகவத்கீதை, அத்தியாயம் 2:22*

அறிவியல் மற்றும் மருத்துவம் சார்ந்த நூல்கள் (சரக மற்றும் சுஷ்ருத சம்ஹிதை) வேதங்களின் ஒரு முக்கியமான பகுதியாகும். சரக முனிவர் அக மருத்துவத்தைப் பற்றி எழுதுகிறார், சுஷ்ருத முனிவர் உறுப்பு மற்றும் புற உறுப்பு (கைகள், கால்கள்) மாற்று அறுவைச் சிகிச்சைகளைப் பற்றி எழுதுகிறார்:

*"இந்து மதத்தைப் பொறுத்த வரை, ஈகை (சேவா) என்ற சொல் ஆழ்ந்த பொருள் கொண்டது. அதன்படி இன்னொருவரின் உயிரைக் காப்பாற்ற உங்கள் உடலின் ஒரு பகுதியை தானமளிப்பது, வாழ்வின்போதும் வாழ்வுக்குப் பின்பும் நீங்கள் செய்யக்கூடிய மிக உயர்ந்த வடிவிலான ஈகை (சேவா) ஆகும். இம்மதத்தில் எதுவும் அதற்கு அப்பாற்பட்டதல்ல. ஈகை (சேவா) என்ற சொல்லானது கீதை, வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது."*

*மகேந்திரபாய் பாண்ட்யா, லெஸ்டரில் உள்ள ஜலராம் கோவிலின் தலைமைப் பூசாரி, இந்துப் பூசாரிகள் சங்கத்தின் (Association of Hindu Priests) முன்னாள் தலைவர்*

*"இந்துக்கள் தன்னலமற்ற செயல்களைச் செய்து நல்ல ஊழ்வினையைச் சேகரிக்கிறார்கள். உடல் உறுப்புகளை, குறிப்பாக நாம் இறந்து நம் உறுப்புகளால் நமக்கு எந்தப் பயனும் இல்லாதபோது தானமளிப்பதைவிட மேலான ஊழ்வினைப் பரிசு எது? இது மற்றவர்கள் சிறப்பாக வாழ உதவலாம் - இது நமது புனித நூல்களில் பொதிந்திருக்கும் ஓர் இந்து மரபாகும். அதே போலப் பண்டைய இந்தியாவில் சுஷ்ருத முனிவர் தானமளிக்கப்பட்ட புற உறுப்புகளையும் உள்ளுறுப்புகளையும் வைத்து 'உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை' செய்தார்."*

*அனில் பனோத் OBE, பிரிட்டன் இந்து சபையின் (Hindu Council UK) நிறுவனர்-உறுப்பினர் மற்றும் இயக்குநர்*

*"உறுப்பு தானம்தான் எந்த மனிதராலும் அளிக்கப்படக்கூடிய சிறந்த தானம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."*

*திருமதி திருப்தி படேல், பிரிட்டன் இந்து மன்றம் (Hindu Forum of Britain)*

இந்து மதத்தைப் பற்றிய தகவல்களை இங்கு காணலாம்:
**www.bbc.co.uk/religion**

சமண மற்றும் இந்து உறுப்பு தான வழிநடத்தும் குழு (Jain and Hindu Organ Donation Steering Group - JHOD), உறுப்பு தானத்தைப் பற்றி இந்து மற்றும் சமண வகுப்புகளில் இருப்பவர்களுக்குக் கல்வியளிக்கப் பாடுபடுகிறது. இந்தக் குழு இந்த வகுப்பினருக்காக வளங்களை உருவாக்கியுள்ளது. உறுப்பு தானத்திற்கு ஊக்கமளிப்பதற்கான தனது முயற்சிகளில் தேசிய அளவில் வகுப்புக் குழுக்களை இது ஆதரிக்கிறது.

**Twitter @JHOD_UK**
**www.facebook.com/jhoduk**

JHOD பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து அதன் தலைவரான கிரித் மோதியை **kiritmodi1@hotmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்

# தேர்வு செய்தல்

## நான் எப்படிக் கொடையாளர் ஆவது?

நீங்கள் உங்கள் உறுப்புகளில் அல்லது திசுவில் சிலவற்றை அல்லது அனைத்தையும் தானமளிக்க விரும்பினால், உங்கள் விருப்பம் என்ன என்று உங்கள் குடும்பத்தினர் அறிந்து நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தச் சிறந்த வழி, NHS உறுப்புக் கொடையாளர் பதிவேட்டில் ஒரு கொடையாளராகப் பதிவு செய்துகொண்டு நீங்கள் என்ன முடிவு செய்தீர்கள் என்று உங்கள் குடும்பத்தினரிடம் சொல்வதுதான். உங்கள் மத நம்பிக்கை முக்கியமானதா என்பதையும் தானம் குறித்த கலந்துரையாடலில் அதுவும் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டுமா என்பதையும்கூட நீங்கள் பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

## நான் தானமளிக்க விரும்பவில்லை என்றால்?

நீங்கள் தானமளிக்க விரும்பவில்லை என்றால், இந்த முடிவை NHS உறுப்புக் கொடையாளர் பதிவேட்டில் பதிவுசெய்து உங்கள் குடும்பத்தினரிடம் சொல்வது முக்கியமாகும்.

நீங்கள் சில உறுப்புகளை அல்லது திசுவை தானமளிக்க விரும்புகிறீர்கள், ஆனால் பிற உறுப்புகளை அல்லது திசுவை தானமளிக்க விரும்பவில்லை என்றால் தானமளிப்பதிலிருந்து 'விருப்ப விலகல்' செய்யாதீர்கள். அதற்கு பதிலாக, உறுப்புக் கொடையாளராகப் பதிவு செய்துகொண்டு நீங்கள் தானமளிக்க விரும்பும் உறுப்புகளை அல்லது திசுவைத் தேர்ந்தெடுங்கள்.

## தானமளிப்பது பற்றி முடிவுசெய்ய நான் வேறொருவரை நியமனம் செய்ய விரும்பினால்?

organdonation.nhs.uk என்ற முகவரியில் ஒரு படிவத்தைத் தரவிறக்கலாம். இந்தப் படிவம் தானமளிக்கும் முடிவை உங்கள் சார்பாக மேற்கொள்ள வேறொருவரை நீங்கள் நியமனம் செய்ய உதவுகிறது. நீங்கள் படிவத்தை நிறைவுசெய்து திருப்பி அனுப்ப வேண்டியிருக்கும். உங்களுக்காக முடிவுசெய்ய நீங்கள் சட்ட ரீதியாக ஒரு பிரதிநிதியை நியமனம் செய்ய முடியுமா முடியாதா என்பது நீங்கள் பிரிட்டனில் எங்கு வாழ்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது என்பதை தயவுசெய்து கருத்தில் கொள்ளுங்கள்.

மேலும் அறியவும் உங்கள் முடிவைப் பதிவு செய்யவும் **organdonation.nhs.uk** என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள் அல்லது **0300 123 23 23** என்ற தொலைபேசி எண்ணை அழையுங்கள்.

உறுப்பு மற்றும் திசு தானத்தைப் பற்றி
மேலும் அறிய வருகை தாருங்கள்:

**organdonation.nhs.uk**

மே 2020-இல் இற்றைப்படுத்தப்பட்டது

OLC229L4.1 Hinduism (Tamil) 2021129